**மொரட்டுவ மாநகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூலை 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 21 ஆந் திகதியும் சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மொரட்டுவ மாநகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டிற்குரியதாக செலுத்தப்படாதிருந்த பெறுமதிசேர் வரியின் அடிப்படையில் விதிக்கப்பட்ட ரூபா 421,328 தொகையான தண்டப்பணத்தை செலுத்துவதற்கு சபையினால் இணக்கப்படாடு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் இதற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த காலப்பகுதியில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தண்டப் பணத்தை அகற்றுவதற்காக சலுகை ஒன்று வழங்குவதற்கு 2017 ஆம் ஆண்டின் போது உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்த போதிலும், இது வரையிலும் அதற்குரிய பதில் ஒன்று கிடைத்திருக்கவில்லை. தீர்த்து வைப்பதற்கு முடியாதாயின் எதிர்வரும் வருடத்தின் கணக்குகளின் போது கணக்கீட்டு குறிப்புகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் கையிலுள்ள இருப்பு மீதி ரூபா 6,346,987 தொகை குறைவாக கணக்கீடு | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | கணக்குகள் வைக்கும் போது இது வரை இருப்பாக எரிபொருள் இருப்பு மற்றும் ஆயுர் |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. | | வேத இருப்பு மாத்திரமே எடுக்கப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் கணக்கு வைக்கும் போது கையிலுள்ள சகல இருப்புகளையும் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (iii) | முன்னைய ஆண்டின் போது சொய்சா விளையாட்டரங்கை ஒதுக்கீடு செய்யும் போது அறவிட வேண்டிய கட்டணங்களை விட குறைவான கட்டணம் அறவிடப்பட்டமையினால் 07 சந்தர்ப்பங்களின் போது சபைக்கு இழக்கப்பட்டிருந்த ரூபா 234,500 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் அந்த தொகை கிடைக்க வேண்டிய மீதியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய மீதியொன்றாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | அந்த விளையாட்டு போட்டிகள் 111 ஆம் வகுப்பின் விளையாட்டு போட்டியாக கருதியிருந்தமையினால் அறவிட வேண்டிய கட்டணங்களை விட குறைவாக கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தது, எதிர் காலத்தில் அந்த இழக்கப்பட்ட தொகையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டுக் கொள்கின்றோம். |
| (iv) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய பணம் ரூபா 30,664,945 ஆக இருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களில் அந்த தொகை ரூபா 27,017,684 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான மீதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அதற்குரிய பட்டோலைகளுடன் ஒப்பீடு செய்யும் போது நிதிக் கூற்றுக்களில் ரூபா 2,975,407 தொகை அதிகாரித்தும் ரூபா 12,110,331 தொகை குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஊழியர் கடன், நிலுவை ஆதன வரி மற்றும் மதிப்பிழந்த காசோலைகள் போன்ற கணக்குகளின் மீதிகள் மற்றும் பட்டோலைகளின் பிராகரமான மீதிகள் என்பவற்றிக்கு இடையே காணப்படுகின்ற வேறுபாடுகளை |

| | | |
|---|---|---|
| | | இனங்கண்டு எதிர் காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

**பெறவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 47,105,982 பெறுமதியான கிடைக்க வேண்டிய 14 மீதிகளை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | பெறவேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிடுவற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**செலுத்தவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் பல வருட காலமாக கொண்டு வரப்படுகின்ற அபிவிருத்தி ஒதுக்கம் ரூபா 10,000 மற்றும் நிதன் நிதிய மீதி ரூபா 89,210 என்பவற்றை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இனங்கண்டு தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கணக்குகள் இனங்காணப்பட்டு தீர்த்து வைக்கப்பட வேண்டும். | பல வருட காலமாக கொண்டுவரப்படுகின்ற அபிவிருத்தி ஒதுக்கம் மற்றும் நிதன் நிதிய மீதி என்பவற்றை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

**(ஈ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 215,887,025 தொகையான 17 கணக்கு விடயங்களுக்குத் தேவையான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான பட்டோலைகள் அல்லது தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 218 ஆம் பிரிவு | நகர பிதாவினால் ஒவ்வொரு நிதியாண்டின் போதும் சபையின் நிர்வாகங்கள் தொடர்பாக ஒட்டுமொத்தமான தகவல்களை உள்ளடக்கிய வருடாந்த நிர்வாக அறிக்கை சபை மற்றும் அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 218 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நிதிப் பிரமாணம் 756 | ரூபா 400,488,986 தொகையான நிலையான சொத்துக்கள் மற்றும் கையிலுள்ள இருப்புக்கள் தொடர்பாக வருடாந்த மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | நிதிப் பிரமாணம் 756 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உடைந்த பொருட்களை ஏலத்தில் விற்கும் செயற்பாடுகளை பூர்த்தி செய்தல் 2019.11.01 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டுள்ளது . அதனால் குறித்த காலப்பகுதியில் மெய்மெய்யாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. |
| (இ) | **2009 இன் 08 ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்த ) சட்டம்** | | | |
| | 16 ஆம் பந்தி | மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் எழுத்து மூல முன் அங்கீகாரம் இன்றி வாகனத்தின் ஆரம்ப தோற்றத்தை மாற்றும் வகையில் | சட்டத்தின் 16 ஆவது பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | HC-1800 மோட்டார் வாகனம் போக்குவரத்து ஆணையாளரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. PB-7688 வாகனத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு |

| | | |
|---|---|---|
| மூன்று வாகனங்கள் ரூபா 3,713,500 தொகை செலவில் பழுதுபார்க்கப்பட்டிருந்தன. | | கோரப்பட்டுள்ளது. 226-2031 வாகனம் பழுதுபார்க்க முடியாத தொழில்நுட்ப கோளாறுகளின் காரணமாக ஓட்டத்தில் இருந்து அகற்றப்பட்டுள்ளது. |

### 1.4.2 போதியளவான அதிகார பலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபைக் கட்டளைச் சட்டம் (252 ஆம் அத்தியாயம்) 188(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபை நிதியத்தை பயன்படுத்த முடியாத வகையில் கொடுக்கல் வாங்கலான சபையின் 27 உறுப்பினர்களுக்காக திடீர் விபத்து மற்றும் சுகாதார காப்புறுதிக்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது சபை நிதியத்தில் இருந்து முறையே ரூபா 953,715 மற்றும் ரூபா 1,086,807 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 2,040,522 செலுத்தப்பட்டிருந்த போதிலும் சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 1,703,022 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பட்டுள்ள நட்டம் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | மாநகர சபை கட்டளை சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 188(1) ஆம் பிரிவிற்குரிய 289 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படுகின்ற கட்டளைகளுக்கு முரணனாக 41 மாநகர சபை உறுப்பினர்களுக்காக கையடக்கத் தொலைபேசிகள் வழங்குவதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 615,000 செலுத்தப்பட்டிருந்தது. | மாநகர சபை கட்டளை சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 188(1) ஆம் உப பிரிவிற்கு முரணாக நடவடிக்கை எடுக்க முடியாது. | தற்போதைய சமூகத்தின் தேவையின் அடிப்படையில் பிரபல்யம் மிக்க உபகரணமாக இந்த தொலைபேசி பயன்படுத்தப்படுகின்றது. நிலையான தொலைபேசி கட்டணங்களுடன் ஒப்பீடுசெய்யும் போது கையடக்க தொலைபேசி கட்டணங்களும் தற்போது காணப்படுகின்ற போட்டி நிலைமையில் மிகவும் விரைவாக வீழ்ச்சியடைந்திருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,888,075 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 503,990 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபை கட்டளை சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 206 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டில் 20 சந்தர்ப்பங்களின் போது ரூபா 260,414,300 தொகையான மேலதிகப் பற்று வசதிகள் பெறப்பட்டிருந்ததுடன், வங்கிக் கூற்றின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மேலதிகப் பற்று மீதி ரூபா 15,515,963 ஆகும். | மேலதிகப் பற்று வதசிகளை பெற்றுக் கொள்வதைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | நகர அபிவிருத்தி அதிகார சபைக்காக தேசிய சேமிப்பு வங்கியில் பேணப்பட்டு சென்ற ரூபா 5,144,199 தொகையான மீதியொன்று காணப்படுகின்ற சராசரியான சேமிப்பு கணக்கின் பணம் நகரத்தின் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சராசரியான செலவினங்களை செய்வதற்காக இந்த கணக்கில் பணத்தை செலவிடுவதற்கு முடியாதிருந்ததுடன், நகர அபிவிருத்தி அதிகார சபையின் உரிய அங்கீகாரத்தின் அடிப்படையில் நகரத்தின் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக இந்த பணம் செலவிடப்படுகின்றது. |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 126,200 | 117,577 | 95,561 | 154,778 | 126,700 | 113,828 | 106,384 | 157,037 |
| (ii) | வாடகை | 35,000 | 12,507 | 12,614 | 2,930 | 13,024 | 12,676 | 12,780 | 2,786 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 29,325 | 22,097 | 21,733 | 2,933 | 22,976 | 24,308 | 24,482 | 2,933 |
| (iv) | ஏனைய வருமானம் | 667,663 | 602,412 | 586,651 | 125,998 | 680,265 | 508,316 | 524,686 | 109,828 |

## 2.3.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதன வரி ரூபா 50,000 தொகையை விஞ்சிய 170 ஆதன வரி அலகுகளில் இருந்து அறவிட வேண்டிய நிலுவை ஆதன வரி ரூபா 65,386,348 ஆகும். | ஆதன வரி வருமானத்தை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அரசாங்கத்தின் சொத்துக்களைப் போல வரி சலுகை வழங்க வேண்டிய ஆதனங்களின் ஆதன வரி நிலுவையும் காணப்படுவதுடன், நடமாடும் சேவையினை நடாத்துதல் மற்றும் ஆதனங்களை தடை செய்வதன் மூலம் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | 2019 சனவரி 01 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 51,555,323 தொகையான வியாபார வரி மீதியில் ரூபா 50,384,523 தொகை அதாவது 97 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது சிட்டையிடப்பட்ட பெறுமதி ரூபா 7,877,100 ஆக இருந்த போதிலும், அதில் ரூபா 50,384,523 தொகை அதாவது 98 சதவீதத்தை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | பெறவேண்டிய வியாபார வரி மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வியாபார வரி பேரேட்டை நாளாதுவரையாக்கும் போது ஏற்பட்டுள்ள தாமத வழுக்களினால் அதனை சரிசெய்வதற்கு 1998 இற்கு முன்னர் பல வருட காலம் பின்னோக்கி பதிவேடுகளை பரீட்சிக்க வேண்டியிருந்தமையினால் எதிர்காலத்தின் போது கூடிய விரைவில் அந்த நடவடிக்கைகளை பூர்த்தி செய்து இதனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.3.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மத்திய வியாபார சந்தையின் கடையொன்று 2015 ஆம் ஆண்டிலிருந்தும், திகரொல்ல நாளாந்த சந்தையில் 09 கடைகள் 2011 ஆம் ஆண்டிலிருந்தும் வாடகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திகரொல்ல நாளாந்த சந்தையின் 10 கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு கேள்வி கோரப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு கேள்வியும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை . மாதாந்த பொது கூட்ட அறிக்கையின் 6(9) 2(1) ஆம் இலக்கத்தின் கீழ் மேற்கூறப்பட்ட கடைகளை வாடகைக்கு வழங்கும் போது அறவிடப்படுகின்ற முற்பணம் மற்றும் பாதுகாப்பு வைப்புப் பணம் என்பன 50 சதவீதத்தினால் குறைக்கப்பட்டு மீண்டும் கேள்வி கோரப்பட்ட போதிலும், கேள்வி எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. மின்சார வாசிப்பு மானியுடன் இரண்டு கடைகள், கூட்டுப் பசளை உற்பத்திக் கூடம் மற்றும் விற்பனை கடை என்பன வாடகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 10 தவணைகளுக்கு மேற்பட்ட 26 நிலுவை ஆதனங்களில் இருந்து ரூபா 951,557 தொகையான கடை வாடகை அறவிட வேண்டி காணப்பட்டது. | கடை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிவோடுகளில் இருந்து பதிவழிப்பதற்காக கௌரவ பிரதம அமைச்சரின் அங்கீகாரத்தை பெறும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

### 2.4 மிகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டின் போது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களுக்காக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 760,173 தொகை அறவிட வேண்டி இருந்தது. | பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 04 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 20,101,581 தொகையான நிலுவை கழிவுப் பொருள் வரிகளில் மீளாய்வாண்டின் போது ரூபா 3,255,790 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | பெறவேண்டிய கழிவுப் பொருள் வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது ஆய்வொன்று மேற்கொள்ளப்படுவதுடன், மூடப்பட்டுள்ள நிறுவனங்கள் என்ன என உறுதிப்படுத்தி முறையான பிரகாரம் பதிவேட்டில் இருந்து அகற்றுவதற்கும் ஏனைய நிறுவனங்களில் இருந்து கட்டணங்களை அறவிடுவதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பல வருட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற ஆதன் வரி மோசடி செய்ததால் ஏற்பட்ட நட்டமான ரூபா 381,969 தொகையான மீதி நிதிக் கூற்றுக்களில் நடைமுறைச் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. நட்டத்தில் ரூபா 241,749 தொகையை உத்தியோகத்தர் ஓய்வு பெற்றுச் செல்லும் சந்தர்ப்பத்தின் போது அறவிடுவதற்கு 2011 பெப்ரவரி 14 ஆம் திகதி ஒழுக்காற்று கட்டளையொன்று வழங்கப்பட்டிருந்த | நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபைக்கு ஏற்பட்ட நட்டமான பணத்தில் இருந்து ரூபா 100,000 தொகையை ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து ஒரே தடவையில் அறவிடுவதற்கும் மிகுதி தொகையை அவரின் நிலுவை ஓய்வூதியத்திலிருந்து அறவிடுவதற்கும் ஒழுக்காற்று கட்டளை வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 55 வருடங்களை பூர்த்தி செய்து ஓய்வு பெற்றுச் சென்றதன் பின்னர் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 1999 ஆகஸ்ட் 10 ஆம் திகதி ஏற்பட்ட விபத்து தொடர்பாக பிரச்சினைக்கு உட்பட்டிருந்த தரப்பினருக்கு ரூபா 3,001,717 தொகை செலுத்துவதற்கு பிழை செய்தவரான சாரதிக்கு விதிக்கப்பட்டிருந்ததுடன் அந்த தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. 2019 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையில் சாரதியிடம் இருந்து ரூபா 112,205 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிராகரம் சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 2,889,512 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப விசாரணையொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக முறையான ஒழுக்காற்று பரிசோதனையொன்று உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்த தீர்மானம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் மிகுதி நடவடிக்கைகள் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2003 முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அறிக்கை மற்றும் பங்களிப்பு பணம் அனுப்புவதில் உள்ள தாமதத்தின் அடிப்படையில் ரூபா 1,549,200 தொகையான மிகை கட்டணம் செலுத்தும் பொறுப்பொன்று சபைக்கு எழுந்திருந்ததுடன் 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலத்தில் சபையினால் செலுத்தப்பட்ட ரூபா 1,088,565 தொகை மற்றும் மிகுதி தொகை என்பவற்றை அதற்குரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 156 இன் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஈ) | 1329 ஆம் இலக்க நிதி திட்டம் அங்கீகரித்தல் தொடர்பாக சபைக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கின் போது 2018 யூலை 20 ஆம் திகதி | நிதிப் பிரமாண 156 இன் பிரகார பொறுப்பு வாய்ந் தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்ட நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் முறைப்பாட்டாளருக்கு இழப்பீட்டுப் பணம் மற்றும் வழக்குக் கட்டணமாக சபையினால் செலுத்தப்பட்ட ரூபா 11,602,308 தொகையை அதற்கு பொறுப்பு வாய்ந்த தாரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டும். | |
| (உ) | சபையினால் 2000 முதல் 2003 ஆம் ஆண்டு வரை 11 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட முற்பணம் ரூபா 43,822 தொகை தீர்த்து வைக்காமையினால் சபை அங்கீகாரத்துடன் அந்த மீதி பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும், மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 266 ஆம் பிரிவின் பிரகாரம் பதிவழிப்பதற்காக அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 156 இன் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களும் அகற்றப்பட்டமையினால் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 266(அ) பிரிவின் பிரகாரம் பதிவழிப்பதற்கு 2018.12.06 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி வரையில் 96 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதில் சிரேஷ்ட நிலையில் 05 பதவிகளின் வெற்றிடங்கள் காணப்பட்டமையின் காரணமாக சபையின் நடவடிக்கைகளை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்ற முடியாதிருந்தது. | அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதம செயலாளர், மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அறிவித்து அனுப்பப்பட்டிருந்ததுடன் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | செயற்திட்டம், ஒப்பந்த, தற்காலிக மற்றும் நாட்கூலி அடிப்படையில் 04 பதவிகளுக்காக சேர்க்கப்பட்ட 55 ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 7,398,680 | ஊழியர்களைச் சேர்க்கும் போது முறையான அங்கீகாரம் பெறவேண்டி இருந்ததுடன் | சபையின் வேலை நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | தொகை செலுத்தப்பட்டிருந்தது. | ஆண்டின் ஆரம்பத்தில் பாதீட்டு நிதி ஏற்பாடும் ஒதுக்கப்பட வேண்டும். | செயற்திட்டங்களுக்காக ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். |
| (இ) | ஆட்சேர்க்கப்பட்ட பதவிகளுக்கு புறம்பாக ஏனைய கடமைகளில் 36 ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | உண்மையான பதவியின் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சேவை தேவையின் அடிப்படையில் கடமைச் செயற்பாடுகளை முறையாக பேணி செல்வதற்காக வெற்றிடங்களை நிரப்பும் வரை உள்ளபடியான பதவிகளுக்கு புறம்பாக இவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இது வரையில் அதில் அனேகமானோர் உரிய பதவிகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். |
| (ஈ) | 2014 நவம்பர் 12 ஆம் திகதிய 25/2014 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நிரந்தர பதவி வழங்கப்பட்ட 112 ஊழியர்களுக்கு 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் சபையில் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியினரில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது இந்த ஊழியர்களுக்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 36,060,932 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கி சம்பளத்தை மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 11 ஊழியர்களை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்குவதற்கான விபரங்கள் உரிய மாதிரி படிவத்தின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (உ) | வேலை நீக்கம் செய்யப்பட்ட மற்றும் சேவையிலிருந்து விலகிச் சென்ற 32 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 819,721 தொகையும், மரணமடைந்த மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற 16 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 307,951 தொகையும், இடம் மாற்றலாகிச் சென்ற 12 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,008,575 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 2,136,247 தொகையான கடன் மீதிகளில் மீளாய்வாண்டின் போது எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வேலை நீக்கம் செய்யப்பட்ட மற்றும் சேவையிலிருந்து விலகிச் சென்ற 32 உத்தியோகத்தர்களிடம் இருந்து 2019 ஆம் ஆண்டில் பணம் அறவிடப்படாதிருந்த போதும் தொடர்ந்தும் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. 04 பேர்களைத் தவிர ஏனைய உத்தியோகத்தர்களிடம் இருந்து தவணைப் |

| | | | |
|---|---|---|---|
| | | | பணமாக செலுத்தப்படுகின்றது. |
| (ஊ) | செயற்பாடற்ற கடன் மீதி பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 128 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதியான ரூபா 1,573,627 தொகையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பிணைகாரர்களிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019.12.31 வரை செயற்பாடற்ற கடன் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட எந்தவொரு கடன் தொகையும் செலுத்தப்படாதிருந்த போதும் தொடர்ந்தும் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சொய்சா விளையாட்டரங்கின் உள்ளக விளையாட்டரங்கில் இரண்டு கிரிக்கெட் பயிற்சியளித்தல் நிரல்கள் இரண்டு வருட காலம் முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்ததுடன், அந்த நிரலை பிரிப்பதற்காக பொருத்தப்பட்டிருந்த வலை கிழிந்து மிகவும் உடைந்த நிலையில் காணப்பட்டது. அவ்வாறே இருபக்க நிரல்களிலும் பொருத்தப்பட்ட 10 மேகரி மின்குமிழ்கள் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது. | உள்ளக விளையாட்டரங்கில் வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வின் போது சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளுடன் சொய்சா விளையாட்டரங்கை நவீனமயப்படுத்தும் செயற்பாடுகள் விளையாட்டு அமைச்சு மற்றும் விளையாட்டு கட்டுப்பாட்டு சபையுடன் மேற்கொள்வதற்கு நகர பிதா விளையாட்டு குழுவின் போது பரிந்துரை செய்திருந்தார். |
| (ஆ) | சொய்சா விளையாட்டரங்கில் ‘‘மொரட்டுவை விளையாட்டு கழகம்’’ என்ற பெயரில் இரண்டு மாடிக் கட்டிடமொன்றை ஸ்தாபித்து வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த கட்டிடம் சபையின் அனுமதியின்றி கழக மண்டபம் (Club House) மற்றும் உடற்பயிற்சி நிலையத்திற்கு ‘‘மொரட்டுவ விளையாட்டு கழகம் ‘‘ இனால் உப வாடகைக்கு வழங்கப்பட்டு முறையே மாதமொன்றுக்கு ரூபா 25,000 மற்றும் ரூபா 30,000 வீதம் உழைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | த செய்சா விளையாட்ரங்கு மொரட்டுவ மாநகர சபைக்குச் சொந்தமான சட்ட ரீதியான ஆதனம் ஒன்றாக இருந்தமையால் தற்போது அந்த நிலத்தில் நடாத்தப்படுகின்ற மொரட்டுவ விளையாட்டு கழகத்திற்கு சொந்தமான சகல பொருட்களும் அகற்றப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | கிரிக்கெட் போட்டிகள் நடாத்தப்படுகின்ற தினங்களில் மொரட்டுவ விளையாட்டு கழகத்தினால் கணிசமான தொகையும் உழைக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | | கட்டிடத்தின் உரித்தை இந்த சபைக்கு கையளிக்குமாறு அந்த விளையாட்டு கழகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள போதும் இது வரையிலும் அகற்றப்படவில்லை. அந்த நிலத்தில் அகற்றப்படாதிருக்குமாயின் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |
| (இ) | பகல், இரவு சேவையினை வழங்குகின்ற தீயணைப்பு பிரிவில் 09 உத்தியோகத்தர்களின் பதவிகள் 2014 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஈ) | தீயணைப்பு பிரிவில் பேணிச் செல்வதற்காக தேவையான 26 விடயங்களுக்குரிய 256 உபகரணங்கள் தீயணைப்பு பிரிவில் காணப்படவில்லை. | அத்தியவசிய சேவையொன்றான தீயணைப்பு பிரிவற்காக தேவையான உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளுராட்சி நிறுவனமொன்றாக செயற்படுவதற்கு வசதியீனம் ஆனமையால் உள்ளுராட்சி திணைக்களத்தின் தீயணைப்பு பிரிவிற்கு தேவையான இயந்திர உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (உ) | 1985 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் சபைக்குக் கிடைக்கப்பெற்ற ரூபா 2,600,000 பெறுமதியான 02 தீயணைப்பு வாகனங்கள் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தீயணைப்பு வாகனங்கள் பதிவு செய்யப்பட வேண்டும். | 1985 ஆம் ஆண்டில் தீயணைப்பு வாகனங்கள் தொடர்பாக பதிவு செய்வதற்காக தேவையான தகவல்கள் காணப்படாதிருந்ததுடன், 2006.07.11 ஆம் திகதி ஜப்பான் நிதி உதவியாக வழங்கப்பட்ட செசி இலக்கம் FD-172B 22476 ஆம் இலக்க தீயணைப்பு வாகனம் |

| | | | |
|---|---|---|---|
| | | | தொடர்பாக பதிவுச் சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 விளைவற்ற / குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மொரட்டுவ மாநகர சபைக்குச் சொந்தமான 371.8 பேர்ச் அளவிலான 19 காணிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான காணிகளை பயன்படுத்த வேண்டும். | நகர சபைக்கு சொந்தமான காணிகளை இனங்கண்டு அவற்றை பதிவேடுகளுக்கு கொண்டுவரும் நிகழ்ச்சித் திட்டம் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், நகர சபைக்குச் சொந்தமான வெற்றுக் காணிகளை பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) | எஞ்சினை பழுதுபார்த்தல் உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்ப கோளாறுகளினால் 17 வாகனங்கள் ஓட்டத்தில் இருந்து அகற்றப்பட்டதுடன், அந்த வாகனங்கள் 02 வருடங்கள் முதல் 18 வருடங்கள் வரையான காலம் செயற்பாடற்று காணப்பட்ட போதிலும் விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எஞ்சின் பழுதுபார்க்கப்படாமை மாத்திரம் அன்றி பல்வேறு தொழில்நுட்ப கோளாறுகளின் காரணமாக அந்த வாகனங்கள் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது. அவற்றை பழுதுபார்த்து ஓட்டத்தில் ஈடுபடுத்துதல் ஆக்கபூர்வமாக இல்லாதிருந்தமையினால் விற்றுத் தீர்ப்பதற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (இ) | மொரட்டுவ நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள நடன மண்டபத்தின் நிர்மாணம் 1995 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட போதும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பூர்த்தி | விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த செயற்திட்டத்தின் வேலைகளை ஆரம்பிப்பதற்கு தேவையான நிதி ஏற்பாடு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டமை |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருக்கவில்லை. | | காரணமாக செயற்திட்டத்தின் வேலைகளை ஆரம்பிக்க முடிதயாதிருந்தது. நிதி ஏற்பாடு உறுதியாக வழங்கப்படுமாயின் உடனடியாக பகிரங்க கேள்வி கோரி ஆரம்பிப்பதற்கு முடியும். |
| (ஈ) | சபைக்குச் சொந்தமான 07 உத்தியோகபூர்வ இல்லங்கள் 2009 முதல் 2017 வரையான காலப்பகுதியில் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணிசமான அளவில் பழுதுபார்த்தல்களை செய்ய வேண்டியிருந்த இந்த வீடுகளின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் செய்யப்படுகின்றது. |
| (உ) | மத்திய சந்தை கட்டிடத்தின் இரண்டாவது மாடி 2010 ஒக்தோபர் 31 ஆம் திகதியின் பின்னர் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மத்திய சந்தையின் கட்டிடத்தை வாடகைக்கு வழங்கி வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஊ) | புதிய மின் பிறப்பாக்கி இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்வதற்காக செயற்படு நிலையில் காணப்பட்ட மின் பிறப்பாக்கி இயந்திரம் 2010 யூலை 28 ஆம் திகதி முதல் பாவனையில் இருந்து அகற்றப்பட்டதுடன் அது சபை வளவில் விளைவற்று காணப்பட்டது. | மின் பிறப்பாக்கி இயந்திரத்தை பயன்படுத்துவதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (எ) | உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் 2017 செப்தெம்பர் 13 ஆம் திகதி சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 632,500 பெறுமதியான கூறுகளாக்கும் இயந்திரம் பயன்படுத்தாமல் விளைவற்று காணப்பட்டது. | கூறுகளாக்கும் இயந்திரத்தை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு தேவை ஏற்படுமாயின் ஏனைய நிறுவனங்களுக்கு வழங்குதல் வேண்டும். | கூறுகளாக்குவதற்காக எடுத்து வரப்படுகின்ற உக்காத கழிவுப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைப்பதில் உள்ள பிரச்சினைகள் காரணமாக கூறுகளாக்குதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. களஞ்சிய |

| | | | |
|---|---|---|---|
| | | | இடவசதிகளும் இடமொன்றை கண்டறிந்த பின்னர் மீண்டும் உக்காத கழிவுப் பொருட்களை கூறுகளாக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதை குறிப்பிடுகின்றோம். |
| (ஏ) | லுனாவ செயற்திட்டத்தில் இருந்து கிடைத்த வாகனங்க உதிரிப்பாகபாங்களின் 1711 அலகுகள் 2010 ஆம் ஆண்டு முதல் விளைவற்று மற்றும் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது. | விளைவற்ற சொத்துக்களை பயன்பாட்டுக்கு எடுப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஐ) | நீண்ட கால உரித்து சபைக்கு காணப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 102,000,000 தொகையான 0.7063 ஹக்டேயர் அளவான லுனாவ விருந்தினர் விடுதி அமைந்துள்ள காணியில் மாடி வீட்டு செயற்திட்டத்திற்காக வீடமைப்பு அதிகார சபையினால் கையேற்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபையில் இருந்து பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இழப்பீட்டு பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மதிப்பீட்டு தொகையை சபைக்கு பெற்றுக் கொள்வதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. இறுதியாக 2019.12.12 ஆம் திகதி இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பிரதமர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |

**3.5.2 வாகன பயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நன்கொடையாக சபைக்கு கிடைத்த 11 வருடங்கள் முதல் 33 வருடங்கள் வரையான காலம் பழமையான 07 வாகனங்களை பதிவுசெய்வதற்கு தேவையான ஆவணங்கள் இல்லாமையின் காரணமாக சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் பதிவு செய்யப்பட வேண்டும். | நன்கொடையாக மொரட்டுவ மாநகர சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் பதிவு செய்வதற்கு தேவையான ஆவணங்கள் காணப்படாமை பிரச்சினைக்குரியதாக காணப்பட்டது. செசி இலக்கம் FD-172B |

| | | |
|---|---|---|
| | | 22476 ஆம் இலக்க தீயணைப்பு வாகனத்தை பதிவு செய்வதற்காக காணப்படுகின்ற தகவல்களின் பிரகாரம் தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) 11 வாகனங்களுக்காக மீளாய்வாண்டிற்குரிய வருமான அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த வருமான அனுமதிப் பத்திரம் பெறப்பட வேண்டும். | பல்வேறு தொழிநுட்ப கோளாறுகளின் காரணமாக சில வருடங்கள் வருமான அனுமதிப்பத்திரம் பெறப்படாதிருந்ததுடன் 25, 26, 27 ஆம் இலக்க வாகனங்களின் பதிவுச் சான்றிதழ் எங்கள் வசம் காணப்படாமையினால் வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டிற்காக 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்கள் மாத்திரம் நடைபெற்று இருந்தன. | காலாண்டிற்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடத்தப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. |